இணைய ஆதாயக் குற்றவாளிகள்!

கோவை சிறுமி பலாத்காரம் செய்து கொல்லப்பட்ட விவகாரத்தில் த.வெ.க ஆதரவு சமூக வலைதள மாஃபியா தனது கோர முகத்தை இன்னும் உக்கிரமாக காட்டிக்கொண்டிருக்கிறது. 'சட்டம் ஒழுங்கு சீர்குலைவு' என்ற ஒற்றை வாக்கியத்தை வைத்துக்கொண்டுதான் தமிழ்நாட்டில் நடந்த தனிநபர் குற்றங்களை யெல்லாம் அரசாங்கத்தின் பொறுப்பாக்கி விஜய் பிரச்சாரம் செய்தார். இத்தனைக்கும் எல்லாக் குற்றங்களிலும் குற்றவாளி கள் உடனுக்குடன் கைது செய்யபட்டு தண்டனையும் பெற்றுத் தரப்பட்டது.

அண்ணா பல்கலைக்கழக மாணவி பலாத்கார சம்பவம் ஒரு உதாரணம். இருந்தும் தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பே இல்லை என்ற பொய்யை த.வெ.கவின் டிஜிட்டல் மாஃபியா இடைவிடாமல் பரப்பியது. அந்தப் பொய்பிரச்சாரத்திற்கு பலியாகி கணிசமான பெண்கள் ஒரு பீதியுடன் த.வெ.கவிற்கு வாக்களித்தார்கள். தேர்தலில் த.வெ.க வென்றதும் ' இப்போதுதான் நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம்' என சில பெண்களை பேசவைத்துப் பரப்பினார்கள்.

ஆனால் கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள்கூட தாங்கவில்லை. நெஞ்சை உலுக்கும் பலகொடூர சம்பவங்கள் தொடர்ச்சியாக தமிழகமெங்கும் அரங்கேறிவருகின்றன. 'என்ன காரணங்கூறி ஆட்சிக்கு வந்தீர்களோ அதே குற்றங்கள்தான் இப்போதும் நடக்கின்றன, உங்கள் பதில் என்ன?' என்று மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள். பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த வர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். ஆனால் இதற்கு மட்டுமல்ல எதற்குமே முதலமைச்சர் பதில் அளிக்க மாட்டார். அமைச்சரிடம் கேள்வி கேட்டால் கேமிரா முன் வாய் மூடிச் சிரிப்பார். காவல்துறை அதிகாரிகள் செய்தியாளர்கள் சந்திப்பிலேயே வாய்விட்டுச் சிரிப்பார்கள்.

ஆனால் கடந்த காலத்தில் த.வெ.க இழைத்த கரூர் நெரிசல் மரணங்கள் போன்ற குற்றங் களையெல்லாம் தி.மு.க. மேல் திசை திருப்பி ருசிகண்ட சமூக வலைதள நாசகார கும்பல் ஆட்சிக்கு வந்தபின்னும் அதே உத்தியைக் கையாண்டு மக்களை திசை திருப்பும் முயற்சியில் இறங்கியிருக்கிறது. இந்த முறை தி.மு.க. மீது மட்டுமல்ல, பாதிக்கப்பட்ட மக்களின்மீதும் தன் கோரப்பற்களை நீட்டத் தொடங்கியிருக்கிறது. எந்த போலி நாடகங்கள் மூலம் ஆட்சிக்கு வந்தார்களோ அதே போலி நாடகங்கள் மூலம் தங்களது கையாலாகாத அரசை காப்பாற்றிவிடலாம் என்று நம்புகிறார்கள்.

கொல்லப்பட்ட கோவைச் சிறுமியின் அம்மாவின் ஒழுக்கத்தை கேள்விக்குள்ளாக்கி அவர்தான் இந்தக் குற்றத்திற்கு காரணம் என்பது போன்ற காணொளிகளை பரப்பி வருகிறார்கள். இன்னொரு புறம் குற்றம் இழைத்த நபரை தி.மு.கவோட சம்பந்தப்படுத்த முயற்சிக்கும் போலிக் காணொளிகள். அதே சமயம் சிறுமியின் மரணம் தொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் காவல்துறை அதிகாரிகள் சிரிக்கும் காணொளி வெளிவந்தால் அது ஏ.ஐ. காணொளி எனப் பரப்புவது. அதாவது பொய்யை உண்மை எனக் காட்டுவது. உண்மையை பொய் எனக்காட்டுவது. இதேதான் ஆரம்பம்முதல் நடந்து கொண்டிருக்கிறது.

எம்.எல்.ஏ.க்களின் போலிக் கல்விச் சான்றிதழ்கள், ஏற்கனவே நடந்துகொண்டிருக்கும் திட்டங்களை புதிதாக அறிவிப்பதுபோல ஸ்டிக்கர் ஒட்டுவது, கஜானா காலி என பொய்சொல்லிவிட்டு எதிர்ப்பு வந்ததும் மறுநாளே மகளிருக்கும் மாணவர்களுக்கும் மாதாந்திர தொகையினை அளிப்பது, அரசு எந்த அரசாணையும் போடாத பொய் அறிவிப்புகளை (அரசு அலுவககத்தில் லஞ்சம் வாங்கியவர்களை படம் பிடித்தால் ஒரு இலட்சம் பரிசு) இன்ஸ்டாகிராமில் பரப்புவது,

மனுஷ்ய புத்திரன்
ஆலோசகர்,
தி.மு.க. தகவல்
தொழில்நுட்ப அணி

'ரீல்ஸ்'க்காக அத்து மீறி அரசு அலுவலகங்களிலும் மருத்துவமனையிலும் சட்ட விரோதமாக த. வெ.கவினர் ஆய்வுகளில் ஈடுபடுவது, அமைச்சர் பெட்டிக் கடையில் போய் ' முறுக்கின் மனுஃபாக்சரிங்க் டேட்' எனக் கேட்டு அதிரடி சோதனையில் ஈடுபட்டு 'ரீல்ஸ்' எடுப்பது, தலைமைச் செயலகத்தில் முதல்வர் அலுவலகத்திலிருந்தே 'ரீல்ஸ்'களை வெளியிடுவது என இந்த இருபது நாட்களில் என்னதான் நடக்கவில்லை இந்தத் தமிழ் நாட்டில்?

மின்வெட்டால் தமிழ்நாடே தத்தளித்துக்கொண்டிருக்கும்போது இதற்குக் காரணம் 'மின் துறையில் சில கறுப்பு ஆடுகள்தான் காரணம்' என பழியை பிறர்மேல் போட்டு தப்பி ஓடுகிறார்கள். ஆனால் மின் வெட்டு அன்றாட வாழ்க்கையை சீர் குலைக்கும் கடும் துயரம். கரூர் சம்பவத்தை போல இதையும் கையாளலாம் என்று திட்டமிட்டால் மக்கள் கடும் பதிலடி கொடுப்பார்கள்.

தமிழ்நாட்டின் இன்றைய நிலை அரசாங்கம் என்ற ஒன்று இருக்கிறதா என்பதே கேள்விக்குறியாகியிருக்கிறது. எல்லாத் துறைகளும் முடங்கிப் போயிருக்கின்றன. அரசு அதிகாரிகளுக்கு எந்தத் திசையில் செல்வது என்று தெரியவில்லை. பல்வேறு நிழல் அதிகார மையங்கள் அரசு எந்திரத்தை ஆட்டிப் படைக்கின்றன. அமைச்சர்களுக்கு அதிகாரிகள்மேல் எந்தச் செல்வாக்கும் இல்லை. ஒரு அமைச்சருக்கு தான் வகிப்பது சுற்றுலாத் துறையா சுற்றுச் சூழல் துறையா என்பதுகூடத் தெரியவில்லை. தொழில்துறை அமைச்சர் எதிர்மறை செய்திகள் மூலம் தன்னை பிரபலப்படுத்துவதில் குறியாக இருக்கிறார். முதலீடுகள் தமிழ்நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கியிருக்கின்றன. ஆறுமாதம் அவகாசம் கொடுத்து விமர்சிப் போம் என்றார்கள். அரை மாதத்திலேயே இந்த அரசின் சாயம் வெளுத்துவிட்டது.

ஒரு புதிய அரசில் தடுமாற்றங்கள் இருக்கலாம். போதாமைகள் இருக்கலாம். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களையும் நியாயம் கேட்பவர்களையும் ' கேரக்டர் அசாஷினேசன்' செய்வதன் மூலமே தாங்கள் தொடர்ந்து ஆட்சி செய்யலாம் என நினைத்தால் அதை விட மூடத்தனம் வேறு எதுவும் இல்லை. அன்றாடம் பலபிரச்சினைகளில் சிக்கித் தவிக்கும் மக்களின் கேள்விகளுக்கு பதில் தேவை. அவதூறுகளும் பொய்களுமே இதற்கு பதில் என்றால் வாக்களித்த மக்களுக்கு செய்யும் துரோகம் அது.

சில உடனடி ஆதாயங்களுக்காக இந்த அரசை தூக்கிச் சுமப்பவர்கள் எல்லாவற்றுக்கும் வாய்மூடி மௌனமாக இருக்கிறார்கள். இவர்கள் தி.மு.க.வோடு இருந்தபோது ஏதாவது பிரச்சினை வந்தால் அரசுக்கு எத்தகைய நெருக்கடிகளைக் கொடுத்தார்கள் என்பதை நினைத்துப்பார்க்க வேண்டியிருக்கிறது. பதில் அளிக்கும் முதலமைச்சரிடம்தான் கேள்வி கேட்க முடியும். இறுகிய மௌனத்தோடு இருப்பவரிடம் என்ன கேட்க முடியும்? அவரது ஆட்சியை காப்பாற்றும் திருப்பணியை மட்டும் செய்துகொண்டிருப்பார்கள்.

த.வெ.கவின் இந்த சமூக வலைதள கும்பல் ஒரு மிகப்பெரிய சமூக விரோத கும்பலாக வளர்ந்திருக்கிறது. இன்றைய தகவல் தொழில் நுட்ப சட்டபடியே இவர்கள் மிகக்கடுமையாக தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களை செய்து வருகிறார்கள். நேற்று குழந்தைகளை பயன்படுத்தி ஆட்சிக்கு வந்தார்கள். இன்று ஒரு குழந்தைக்கு நடந்த கொடுமைக்கு அந்தக் குழந்தையின் தாயினது ஒழுக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கி திசை திருப்ப முயற்சிக்கிறார்கள். த.வெ.க. ஆதரவு இணைய மாஃபியாவின் இந்தக் கொடும் செயல்கள் தொடர்ந்து அம்பலப்படுத்தப்படவேண்டும். இவர்கள் சட்டத்தின்முன்நிறுத்தப்படவேண்டும். இன்ஃப்ளுயன்ஸர்கள் என்ற பெயரில் செயல்படும் இந்த இணைய கூலிப் படையினர் ஆதாயக் கொலையாளிகளைவிட ஆபத்தானவர்கள்.

ஈரோடு தெற்கு மாவட்டம் முழுவதும்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

மாவட்டக் கழகச் செயலாளர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, மே 27-

கழகத்தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளான ஜூன் 3ஆம் தேதி செம்மொழி நாளாக நாடெங்கும் கொண்டாடப் படுகிறது. ஈரோடு தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள் ஊர் கிளை மற்றும் துணை அமைப்புகளின் நிர்வாகிகள் அனைவரும் மாநகர பகுதிகளுக்குட்பட்ட 60 வார்டுகளிலும், ஒன்றியங்கள் 15 பேரூர்களிலும் அந்தந்த எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படம் வைத்து மாலை அணிவித்து மரியாதை

செலுத்தியும், பொது மக்களுக்கும், பள்ளி குழந்தைகளுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் நிகழ்ச்சியினை சிறப்பாக நடத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, வார்டு, ஊர் கிளை நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA 2, BLC உறுப்பினர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காலை 7.30 மணி முதல் 9 30 மணிக்குள் மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து இடங்களிலும் அவரவர்களின் நிகழ்ச்சிகளை நடத்தி முடித்திட வேண்டும்.

மேலும் கீழ்க்கண்ட இடங்களில் மாவட்ட கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் படுகிறது.

காலை 9.30 மணிக்கு பெரியார் நகர் மாவட்ட முகாம் அலுவலகத்திலும், காலை 10 மணிக்கு மணல்மேடு மாவட்ட கழக அலுவலகத்திலும், காலை 10:15க்கு பன்னீர்செல்வம் பூங்காவில் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைக்கும், காலை 10:30க்கு முனிசிபல் காலனியில் உள்ள கலைஞர் திருவுருவ சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட உள்ளது.

குறிப்பு :முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படம் வைத்து திட்டங்கள் மற்றும் பாடல்கள் ஒலித்து மக்களுக்கு நமது சாதனைகளை எடுத்துரைக்கும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். ஒலி பெருக்கி மற்றும் தேவையானவற்றுக்கு உரிய அனுமதியை 30.5.2026க்குள் பெற வேண்டும்.

இராயபுரம் 51வது

வட்ட முன்னாள் செயலாளர் க.சேகரன் திருவுருவப் படம்!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி திறந்து வைத்தார்!

சென்னை, மே 27-

சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நாளான 4-ஆம் தேதி தொலைக்காட்சியில் கொளத்தூர் தொகுதியில் தலைவர் தோல்வி முகம் என்ற செய்தியை பார்த்து தாங்க முடியாமல் திடீர் மாரடைப்பால் உயிரிழந்த இராயபுரம் கிழக்கு பகுதி 51வது வட்ட முன்னாள் செயலாளர் க. சேகரன் அவர்களின் திருவுருவப்பட திறப்பு நிகழ்ச்சி 24.5.2026 அன்று மாலை ஜெ.பி. கோவில் தெரு, ஸ்ரீரங்கம்மாள் தெரு சந்திப்பில் நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி அவர்கள் கலந்து கொண்டு திருவுருவப் படத்தை திறந்து வைத்து உரையாற்றினார்.

இந்நிகழ்வில் டாக்டர் கலாநிதி வீராச்சாமி எம்.பி., ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ந. மனோகரன், பி.டி. பாண்டி செல்வம், இரா. செந்தில்குமார், வே.சிவகுமார், கி. ராஜேந்திரன், நா. சண்முகம், பூங்கா நகர் கண்ணன் பொன் லட்சுமி கு. ரமேஷ், சு.திருஞானம், கு.சுந்தர், வட்ட செயலாளர்கள் க கோவிந்தராஜ் க. கலைசெல்வன் இரா. பாலன் எம். ரவி எஸ். புகழேந்தி ஜெ. கௌரீஸ்வரன் எல். சீனிவாசன் கட்பிஸ் சோமசுந்தரமூர்த்தி, கார்த்திக்செங்குட்டுவன், ஒலி ஒளி பாபு, எல்.கிருஷ்ண ஹரிஹரன், வி.கே.ராஜ், சிவ தனுஷ், ஐ. ராஜேஷ், ஆர்.சொப்னாதேவி, ஆர். நரேஷ், சுனில், பிரேம்குமார், சாய்மகேஷ், வண்ணை இ.மூர்த்தி,எம்.இசாகுல்அமிது, ஐ.சி.எப். பழனி, என். பாரி, எம்.எம். சந்துரு, எஸ்.குமார், க. சுரேஷ், சத்தியநாராயணன், ஜி.உமாபதி, கே. குபேரன், டி.நந்தா, வி.சரவணன், பி.சம்பத், எஸ். மாரி முத்து, பி.ஏழுமலை, ஆர். ராஜ்குமார், எம்.சண்முகம், இ.கங்காதரன், எஸ்.பார்த்தசாரதி, சு.பாஸ்கர், சு.பிரபு, டி.கண்ணன், எஸ்.சந்திரசேகர், டி.பழனிராஜ், ஆட்டோ பழனி, சீனிவாசன், ஸ்ரீதர், ஆட்டோ பாஸ்கர், பி.அன்பழகன் மற்றும் குடும்பத்தினர் கழக நிர்வாகிகள் நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை இரா. முருகன், ஜி. பாபு, எஸ். ஈஸ்வரன், டி.கோடீஸ்வரன், ஆர். நிவேதா, ஆர்.விக்னேஷ், சைக்கிள் எஸ்.கார்த்திக் ஆகியோர் செய்திருந்தனர்.

சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

கழகத் தலைவர் அவர்களின்அறிவிப்பிற்கிணங்க, சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள மூன்று சட்டமன்ற தொகுதிகளில் சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பின்படி சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள மேட்டூர், எடப்பாடி மற்றும் சங்ககிரி ஆகிய தொகுதிகளில் கள ஆய்வுக் கூட்டம் வழக்கறிஞர் ஏ.சரவணன் மற்றும் நா.இளையராஜா ஆகியோர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.

நாள்	தொகுதி	இடம்
29.05.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி	மேட்டூர்	பழனியம்மாள் திருமண மண்டபம், கருமலைக்கூடல், மேட்டூர் ஆர்.எஸ்.
30.05.2026 சனிக்கிழமை காலை 10.00 மணி	எடப்பாடி	ஸ்ரீ நடராஜன் மஹால் திருமண மண்டபம், எடப்பாடி
31.05.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி	சங்ககிரி	ஜே.பி.ஆர். மஹால் திருமண மண்டபம், வைகுந்தம்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் :25.05.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.

த.வெ.க.வின் "வாய்மூடி முதல்வர்" ஆட்சியில்

மதுரையில் 17 வயது சிறுவன் வெட்டிக் கொலை!

ரவுடிகள் அட்டகாசம்!

மதுரை, மே 27 –

மதுரை மீனாட்சியம் மன் கோவிலருகே 17 வயது சிறுவன் படுகொலை உடலை முதல் தளத்தில் இருந்து கீழே வீசிச் சென்ற ரவுடி கும்பல்!

தமிழகத்தின் முக்கியப் பண்பாட்டு மையமாக விளங்கும் மதுரை மாநகரின் மையப்பகுதியில், அதுவும் உலகப் புகழ்பெற்ற மீனாட்சி அம்மன் கோவில் அருகிலேயே அரங்கேறியுள்ள துணிகரக் கொலைச் சம்பவம் ஒட்டுமொத்த தென்மாவட்டங்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியில் 17 வயது சிறுவன் ஒருவன் ரவுடி கும்பலால் மிகக் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளான்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் வளாகத்தை ஒட்டி, தூங்காநகரத்திற்கு வரும் பக்தர்களின் வாகனங்களை நிறுத்துவதற்காக மாநகராட்சிக்குச் சொந்தமான நவீன வாகன காப்பக வணிக வளாகம் இயங்கி வருகிறது. இவ்வளாகத்தின் முதல் தளத்தில் உள்ள ஒதுக்குப்புறமான பகுதியில், நேற்று முன்தினம் நள்ளிரவில் 17 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

அப்போது, நள்ளிரவு சுமார் 2 மணி அளவில் பயங்கர ஆயுதங்களுடன் அங்கு வந்த 5 பேர் கொண்ட ரவுடி கும்பல், தூங்கிக் கொண்டிருந்த அந்தச் சிறுவனைச் சூழ்ந்து கொண்டது. தப்பியோட முயன்ற அவனைக் கண்மூடித்தனமாகத் தலை, கழுத்து உள்ளிட்ட உடல் பாகங்களில் அந்தப் பயங்கரவாதக் கும்பல் கொடூரமாக வெட்டிச் சாய்த்தது.

அத்தோடு நிறுத்தாமல், ரத்த வெள்ளத்தில் துடிதுடித்துச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த அந்தச் சிறுவனின் உடலை, அந்த வணிக வளாகத்தின் முதல் தளத்தில் இருந்து நேராகக் கீழே வீசி எறிந்துவிட்டு, எவ்வித அச்சமுமின்றி அந்த ரவுடி கும்பல் வேகத்தில் தப்பியோடியது.

நேற்று அதிகாலை நேரத்தில் வணிக வளாகத்தின் தரைத்தளத்தில் சிறுவன் ரத்த வெள்ளத்தில் சடலமாக எறியப்பட்டுக் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்த பாதுகாப்புப் பணியாளர்கள், உடனடியாக மதுரை விளக்குத்தூண் காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுத்தனர்.

சம்பவ இடத்திற்கு வேகத்தில் விரைந்து வந்த மாநகரக் காவல் துணை ஆணையர் மற்றும் போலீஸார், சிறுவனின் உடலைக் கைப்பற்றிப் பிரேதப் பரிசோதனைக்காக மதுரை அரசு இராஜாஜி பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். போலீசாரின் முதற்கட்ட விசாரணை யில், கொடூரமாகக் கொல்லப்பட்ட அந்தச் சிறுவன் மீது ஏற்கனவே மதுரை மாநகரின் பல்வேறு காவல் நிலையங்களில் வழிப்பறி, திருட்டு மற்றும் அடிதடி உள்ளிட்ட பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பது வெளிச்சத்திற்கு வந்தது.

கஞ்சா விற்பனை மற்றும் ரவுடி கும்பல்களுக்கு இடையே நிலவி வரும்முன் பகை அல்லது பழிவாங்கும் நோக்கில் இந்த கொடூரக் கொலை அரங்கேறியிருக்கலாம் என்று போலீஸார் பலமாகச் சந்தேகிக்கின்றனர். வணிக வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமரா காட்சிகளைத் தீவிரமாக ஆய்வு செய்து வரும் விளக்குத்தூண் போலீசார், தப்பியோடிய 5 பேர் கொண்ட கொலையாளிகளைப் பிடிக் கத் தனிப்படை அமைத்து வேட்டையில் இறங்கியுள்ளனர். இச்சம்பவத்தால் மீனாட்சி அம்மன் கோவில் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சென்னை தென்மேற்கு மாவட்ட

கலை - இலக்கிய - பகுத்தறிவுப் பேரவைக் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் அறிக்கை!

சென்னை, மே 27-

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் ச. சண்முகநாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலும், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (28.05.2026 - வியாழன்) இரவு 7.00 மணியளவில் தியாகராய நகர், பாண்டிபஜார் பாலாஜி பவன் ஓட்டலில் மாவட்ட அவைத்தலைவர் மயிலை இரா.கா.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட துணைத் தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1) தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா குறித்தும்,

2) கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் செயல்முறைகள் குறித்தும்.

3) மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்தும்.

இவ்வாறு ச.சண்முகநாதன் தமது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதியில் 3வது முறையாக வெற்றி பெற்ற கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் தனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை பேரூர் மற்றும் முருக்கம்பாடி, கொங்கணாமூர், அத்தியந்தல், தேவரடியார்குப்பம், செல்லங்குப்பம், ஐம்பை, கே.சி.தாங்கல், பள்ளிச்சந்தல், மேட்டுச்சேரி, காங்கியனூர், மேலந்தல் ஆகிய ஊராட்சிகளில் பொதுமக்களை நேரில் சந்தித்து தனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்தமைக்கு நன்றி தெரிவித்தார்.

முதலமைச்சர் விஜயின் பெரம்பூர் தொகுதியில்

- இளைஞர்கள் கஞ்சா போதையில்

13 வாகனங்களை உடைத்து சேதப்படுத்திய சம்பவம்!

பொதுமக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது!

சென்னை, மே.27–

தனிப்பெரும்பான்மை இல்லாத த.வெ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் சட்டம் ஒழுங்கு பிரச்சினை அதிகரித்து வருகிறது. இந்நிலையில், முதலமைச்சர் விஜயின் பெரம்பூர் தொகுதியிலும் வன்முறை சம்பவம் அரங்கேறியுள்ளது. பெரம்பூர் தொகுதிக்கு உட்பட்ட முத்தமிழ் நகர் 8வது பிளாக் பகுதியில் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான காலியிடம் உள்ளது. இங்கு அதே பகுதியைச் சேர்ந்த ஐந்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கஞ்சா மற்றும் மது அருந்தியதாக கூறப்படுகிறது. அப்போது இளைஞர்களிடையே தகராறு ஏற்பட்டதாக தெரிகிறது. தொடர்ந்து, கஞ்சா போதையில் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எட்டு கார்கள், ஐந்து ஆட்டோக்களின் கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தியுள்ளனர்.

பின்னர் தப்பியோடிய தயான் ராஜ், விக்னேஷ் உள்ளிட்ட ஆறு இளைஞர்களை புகாரின் பேரில் காவல்துறையினர் கைது செய்தனர். முதலமைச்சர் விஜயின் சொந்தத் தொகுதியிலேயே குற்றச் செயல்கள் அதிகரித்து வருவது பொதுமக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

குன்றத்தூர் தா.மோகலிங்கம்
மே 27 (2012)



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் கழகம் வளர அரும்பாடுபட்டவர். குன்றத்தூர் பேரூர்க் கழகச் செயலாளராக தொடர்ந்து முப்பது ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர்.

1986ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாக ஐந்து ஆண்டுகள் மக்கள் பணியாற்றினார்.

திருப்பெரும்புதூர் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத் தலைவராக பத்து ஆண்டுகள் பணியாற்றியவர். தமிழ்நாடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க இயக்குநராகவும் இருந்துள்ளார்.

அவர்மீது கொலைமுயற்சி வழக்கு உள்ளிட்ட பல பொய் வழக்குகள் தொடரப்பட்டு அ.தி.மு.க. ஆட்சியில் பலமுறை சிறை சென்றுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.